# பன்னிரெண்டாம் வகுப்பு - தமிழ் - அரையாண்டுத்தேர்வு 2023, சென்னை (மாவட்டம்)

(Dr. S. ABDUL HAKKEEM, M.A., B.Ed., Ph.D., P.G. Asst in Tamil, GHSS, Velachery, Chennai - 600042)

## பகுதி - I (14X1=14)

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

1. “மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்குதற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்,
   க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது
   ங) வள்ளல்களைத் தந்தது - **ஈ) க, ங இரண்டும் சரி**
2. பொருத்துக.
   அ) வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் - 1. சேர்ந்தாரைக்கொள்
   ஆ) பயன்தூக்கார் செய்த உதவி - 2. ஞாலத்தின் மானப்பெரிது
   இ) சினம் - 3. தெய்வத்துள் வைக்கப்படும்
   ஈ) காலத்தினாற் செய்த நன்றி - 4. நன்மை கடலின் பெரிது **(ஆ) 3,4,1,2**
2. “மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும் மிஞ்ச புகட்ட மிகவளர்த்தாய்” இப்பாடல் இடம்பெறும் நூல் **ஆ) தமிழ் விடு தூது**
4. “காலை இளம் வெயில் நன்றாக மேய, தும்பறுத்துத் துள்ளிவரும் புதுவெயில்” இக்கவிதையில் ------------ பயின்று வந்துள்ளது. **ஆ) வினைப்படிமம்**
5. சாபவிமோசனம்”, “அகலிகை” கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்துபவர் **ஆ) புதுமைப்பித்தன்**
6. ‘தகடூர்’ என்றழைக்கப்பட்ட தற்போதைய பகுதி **இ) தருமபுரி**
7. ஏழ் ஆண்டு இயற்றி ஓர் ஈராறு ஆண்டில் சூழ்கழல் மன்னற்குக் காட்டல் ---------- தொடர்களில் வெளிப்படும் செய்திகள்.
   1. மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.
   2. ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள். **ஈ) 1 சரி, 2 சரி**
8. “விளியறி ஞமலி” - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது? **இ) நாய்**
9. யானை புக்க புலம்போல - இவ்வுவமைக்குப் பொருத்தமான தொடர் **ஆ) தனக்கும் பயன்படாது, பிறருக்கும் பயன்படாது.**
10. மயிலைப்பதிகத்தில் கடலாட்டு விழா காணப்பெறும் மாதம் **ஈ) மாசி**
11. பின்வரும் நாடுகளுள் புயலுக்குப் பெயர் வைக்கும் பட்டியலில் இடம் பெறாததைத் தேர்க. **இ) சீனா**
12. “காவினெம் கலனே சுருக்கினெம் கலப்பை” - இத்தொடரில் ‘கலன்’ உணர்த்தும் பொருள் **இ) இசைக்கருவி**
13. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர் **ஆ) மயிலைநாதர்**
14. அல்லல் படுப்பதூஉம் இல் - எவரோடு பழகினால்? **ஈ) தீயினத்தார்**

## பகுதி - II (பிரிவு – 1) (3X2=6)

15. **வசனம், கவிதை வேறுபாடு தருக.**
   - எதுகை, மோனை சேர்க்காமல், அடி என்ற அளவு இல்லாமல் எழுதுகின்ற வடிவம் வசனமாகும்.
   - எதுகை, மோனை சேர்க்க வேண்டும் அடிக்கென்று எல்லை வைத்து எழுதப்படுவதே கவிதையாகும்.
16. **நஞ்சுண்பவர் என வள்ளுவர் யாரை இடித்துரைக்கிறார்?**
   - கள் குடித்தல், நஞ்சு அருந்துதல் ஆகிய இரண்டுமே ஒருவரை உணர்வுகள் இல்லாத நிலைக்கே அழைத்துச் செல்லும்.
   - ஆகவே, கள்ளுண்டு மயங்குபவர்களை நஞ்சுண்பவர் என்று வள்ளுவர் இடித்துரைக்கிறார்.
17. **அறிவுடை வேந்தனின் நெறி குறித்துப் பிசிராந்தையார் கூறுவன யாவை?**
   - அறிவுடை வேந்தன் குடிமக்களிடமிருந்து நெறிமுறை அறிந்து வரி வாங்க வேண்டும்.
   - அவ்வாறு வாங்கினால்தான், நாட்டுமக்கள் கோடிக்கணக்கான பொருள்களை ஈட்டிச் செழிப்படைவதோடு அவன் எண்ணமும் நிறைவேறும் எனப் பிசிராந்தையார் கூறுகிறார்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**பன்னிரெண்டாம் வகுப்பு - தமிழ் - அரையாண்டுத்தேர்வு 2023, சென்னை (மாவட்டம்)**

(Dr. S. ABDUL HAKKEEM, M.A., B.Ed., Ph.D., P.G. Asst in Tamil, GHSS, Velachery, Chennai - 600042)

18. **அகநானூற்றில் உள்ள பிரிவுகள் எத்தனை? அவை யாவை?**
- அகநானூறு மூன்று பிரிவுகள் உடையது.
- அவை, 1. களிற்றுயானைநிரை, 2. மணிமிடைப் பவளம், 3. நித்திலக்கோவை

**(பிரிவு -2)** **(2X2=4)**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

19. **நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்துக்களைக் குறிப்பிடுக.**

நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறுவன,
- நடைபெற்றியலும்
- நடைநவின்றொழுகும்
- ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை வெண்பா நடைத்தே கலி.

20. **பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.**
- ஏற்ற காலம் அறிந்து, ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒருசெயலை மேற்கொள்வது நேர மேலாண்மை ஆகும்.
- விதைக்கின்ற காலத்தில் விதைத்து, அறுவடை செய்கின்ற காலத்தில் அறுவடை செய்ய வேண்டும் என்பதே இத்தொடரின் பொருளாகும்.

21. **"முறை வைப்பு" - விளக்குக.**
- உபாத்தியாயர் (ஆசிரியர்) ஒன்றைச் சொல்ல அதை மாணாக்கர்கள் பலரும் சேர்ந்து சொல்வது "முறை வைப்பது" என்று அழைக்கப்படும்.

**(பிரிவு -3)** **(7X2=14)**

**எவையேனும் ஏழனுக்கு விடை தருக.**

22. **தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?**
- மொழியின் இயல்பை உணர வேண்டும்
- இலக்கண விதிகளை அறிய வேண்டும்
- தவறின்றி எழுத முயற்சியும் பயிற்சியும் தேவை.

23. **கலைச் சொல் தருக.**
- அ) **RAILWAY SIGNAL** - தொடர்வண்டி வழிக்குறி
- ஆ) **ANIMATION** - இயங்குபடம்

24. **கீழ்க்காணும் சொல்லுருபுகளைப் பிரித்தும் சேர்த்தும் இருவேறு தொடர்களை அமைத்து எழுதுக.**
- **தானே** அவன்தானே எழுதினான்

  அவன் தானே எழுதினான்.

25. **ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக்குறிப்பு தருக.**
- **அ) அடையா** - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
- **ஆ) காய்நெல்** - வினைத்தொகை

26. **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
- **அ) தொழுதனர்** = தொழு + த் + அன் + அர்

  தொழு - பகுதி, த் - இறந்தகால இடைநிலை, அன் - சாரியை

  அர் - பலர்பால் வினைமுற்று விகுதி.
- **ஆ) பொலிந்தான்** = பொலி + த் (ந்) + த் + ஆன்

  பொலி - பகுதி, த் - சந்தி (ந்) ஆனது விகாரம்),

  த் - இறந்தகால இடைநிலை, ஆன் - ஆண்பால் வினைமுற்று விகுதி

27. **ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.**
- **அ) எத்திசை** = எ + திசை



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

விதி 1 ‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’.

- **ஆ) உள்ளொன்று** = உள் + ஒன்று

விதி 1 ‘தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்’

விதி 2 ‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’

**28. பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக.**

- **அ)** நிலத்தை கிளற வேண்டுமடா, அப்பொழுதுதான் வயிறு நிறையும்.
- **ஆ)** ‘நான் பேருந்தில் வருகிறேன்’ என்று சொல்லி முடிப்பதற்குள் மகிழுந்து புறப்பட்டு விட்டது.

29. **தொடரில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**

- ஆட்டுப்பட்டியைச் சுற்றிலும் எலிகள் வளைகள் அமைத்திருந்தன

30. **பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க.**

- **கான் - காண்** - கான் சென்று இயற்கையைக் கண்டு களிக்க வேண்டும்.
- **தின்மை - திண்மை** - திண்மை (வலிமை) உடையவர்கள் எளியவர்களுக்குத் தீமை (தின்மை) செய்யக்கூடாது.

**பகுதி - III (பிரிவு - 1)** **(2X4=8)**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக.**

**31. வாடைக்காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?**

- வாடைக்காலத்தில் கோவலர்கள், தம் நிரைகளைக் காக்க பழகிய நிலத்தைவிட்டு மேட்டு நிலத்தை அடைந்தனர்.
- உடலில் பட்ட குளிரைப் போக்கக் கோவலர் பலர் ஒன்றுசேர்ந்தனர்.
- தீயை மூட்டிச் சுற்றி அமர்ந்து, தீயில் கைகளைக் காயவைத்துக் கன்னத்தில் வைத்துக்கொண்டனர்.
- எனினும், குளிர் நீங்காது, மேல்வாயும் கீழ்வாயும் நடுங்கி, பற்கள் பறையடிப்பன போல் மோதி ஒலி உண்டாக்கின.

**32. “நெல்லின் நேரே வெண்கல் உப்பு” - இத்தொடரின்வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.**

- ரூபாய் நோட்டு, மதிப்பு நிருணயம், அரசாங்கக் கட்டுப்பாடு, விநியோகம் முதலியவை பழங்காலத்தில் உருவாகவில்லை.
- அக்காலத்தில் உற்பத்திப் பொருள்களைப் பகிர்ந்துகொண்ட முறையே பண்டமாற்று.
- ஒரு பண்டத்திற்கு மாற்றாய் மற்றொரு பொருளைப் பெற்றுக்கொள்ளும் முறை தமிழகத்தில் இருந்தது. ஒரு பகுதியில் விளையும் பொருளை மற்றொரு பொருளுக்கு மாற்றாய்க் கொடுத்துப் பொருள் பெற்றனர்.
- எந்நிலப்பகுதி மக்களானாலும் உணவுத்தேவைகளுக்கான உப்பிற்குக் கடற்பகுதி மக்களைச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது.
- எனவே, கடற்பகுதி மக்கள் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று உப்பு விற்றனர்.
- நெல்லும் உப்பும் விகிதாச்சார அடிப்படையில் ஒன்றுக்கு மாற்றாய் மற்றொன்று என்று பெற்றுக் கொள்ளப்பட்டதை அகநானூறு காட்டுகிறது

33. **நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தைக் கூறுக.**

**நிலம் தேர்ந்தெடுத்தல்**

- கற்றுணர்ந்த நூலாசிரியரால் சொல்லப்பட்ட இயல்புகளில் இருந்து மாறுபடாத தூய்மையான நிலத்தை நாட்டிய அரங்கிற்காகத் தேர்ந்தெடுத்தனர்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

பன்னிரெண்டாம் வகுப்பு - தமிழ் - அரையாண்டுத்தேர்வு 2023, சென்னை (மாவட்டம்)

(Dr. S. ABDUL HAKKEEM, M.A., B.Ed., Ph.D., P.G. Asst in Tamil, GHSS, Velachery, Chennai - 600042)

**அரங்க அமைப்பு**

- மாதவி நாட்டியமாடிய அரங்கு எட்டுக்கோல் நீளமும், ஏழுகோல் அகலமும், ஒருகோல் தள உயரமும் கொண்டது. அரங்கின் தளத்திற்குமேல் இருந்த அரங்கின் உயரம் நான்கு கோல் ஆகும்.

**நிகழ்வுக்கேற்ற திரைசீலை**

- நாடக நிகழ்வுகளுக்கு ஏற்ப ஒருமுக எழினி, பொருமுக எழினி, கரந்துவரல் எழினி ஆகியவற்றைக் கலைநுட்பத்துடன் பயன்படுத்தியுள்ளனர்.

**ஒளியமைப்பு**

- நாடகமேடையில் மேல்நிலை மாடத்தில ஐம்பூதங்களை பலரும் புகழும்படி சித்தரித்து வைத்தனர். தூண்களில் நிழல் விழாதவாறு விளக்குகளை அமைத்த முறை நம்மை பிரமிக்கச் செய்கிறது.

**34. "யானை புக்க புலம் போலத் தானும் உண்ணான் உலகமும் கெடுமே" - உவமையையும் பொருளையும் பொருத்தி விளக்குக.**

**உவமை** : யானை புக்க புலம்.

**உவமேயம்** : அரசன் தானும் உண்ணான், உலகமும் கெடும்.

**உவம உருபு** : போல

**விளக்கம்** : யானை, தானே வயலில் புகுந்து, விளைந்த நெல்லை உண்ண முயலுமாயின், நெற்கதிர்கள் மிகுதியும் அதன் நான்கு கால்களால் மிதியுண்டு அழியும் ஆனால், அதன் வாயில் புகுவது மிகவும் குறைவே, விளைச்சல் நிலமும் பாழாகும். அவ்வாறே, வரி வாங்கும் முறை அறியாமல் மன்னன், தரமறியாச் சுற்றத்தோடு குடிமக்களை வருத்தி வரி வாங்க முற்படின், பெரும்பகுதியை அவன் சுற்றத்தார் கொள்வர் அவன் பெறுவது மிகவும் குறைவே. அதனால் அவனது நாடும் கெடும் என்பதாகும்.

**(பிரிவு - 2) (2X4=8)**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.**

**35. வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப்பனவற்றை எழுதுக.**

- நம் மண்வளத்தையும் இயற்கை வளத்தையும் பேணிக் காக்கும்பொருட்டு இயற்கை வேளாண்மை முறைகளை மேற்கொள்ள வேண்டும்.
- வேளாண்மைக்கு முக்கியமான நீர் மேலாண்மையில் சொட்டுநீர்ப்பாசனம் போன்ற புதிய விஞ்ஞானத் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும்.
- இரசாயன உரத்தையும் பூச்சிக்கொல்லிகளையும் விடுத்து இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியைப் பெருக்கலாம்.
- நிலத்திற்கு உகந்த சரியான பயிரைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வு மற்றும் பொறுப்புணர்வோடு கூடிய நிருவாக நெறியும் இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும்.

**36. திரைப்படத்தின் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

- திரைப்படம் என்பது திரை மூலம் கதை சொல்வதாகும். மவுனப்படங்கள் ஓடின காலத்தில் ஒலிவாங்கி மூலம் ஒருவர், ஓடும் படத்தின் முன் நின்று திரைப்படத்தின் கதையைச் சொல்லிக் கொண்டேயிருப்பார் இப்போது காட்சி மூலமாக கதை சொல்லும் நிலைக்கு திரைப்படம் வளர்ச்சி அடைந்துள்ளது. கதை நகர்வுக்கு காட்சிகள் உதவுகின்றன. காட்சிகளை அடுத்தடுத்து வைப்பதன் மூலம் வசனம் இல்லாமலும் கதை சொல்லப்படுகிறது.
- முதல் காட்சியில் தோழி, நாயகியிடம் தொடர்வண்டிப் பயணச்சீட்டைக் கொடுப்பாள். அடுத்த காட்சியில் நாயகி தொடர்வண்டியில் பயணிப்பாள்! எண் 7, வீரையா தெரு, என்று ஒருவர் முகவரியைச் சொல்வது ஒலித்துக் கொண்டிருக்க, கதாநாயகியுடன் காட்சியும் முகவரி வீட்டில் நிற்கும். சிறிது சிறிதாக மங்கலாகி இறுதியில் இருளாக மாறும் வகையில் காட்டப்படும் காட்சியை காட்சி மறைவு என்பர்.




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**பன்னிரெண்டாம் வகுப்பு - தமிழ் - அரையாண்டுத்தேர்வு 2023, சென்னை (மாவட்டம்)**

**(Dr. S. ABDUL HAKKEEM, M.A., B.Ed., Ph.D., P.G. Asst in Tamil, GHSS, Velachery, Chennai - 600042)**

- அடுத்தக் காட்சி சிறிது சிறிதாக வெளிச்சமாகி முழுக்காட்சியும் வெளிப்படும். இதனைக் காட்சி உதயம் என்பர்.
- ஒரு காட்சி மறையும்போதே அடுத்தக்காட்சி திரையில் தெரியத் தொடங்கும். கலவை கூட்டுக் காட்சி என்பார்கள்.
- ஒரு காட்சியை அழித்துக் கொண்டே அடுத்தக் காட்சி திரையில் தோன்றுவதை "அழிப்பு" என்பார்கள். இப்படியாக இயக்குநராலும் படத்தொகுப்பாளராலும் காட்சியானது காட்சி ஆற்றலாக மாறி நல்ல திரைப்படமாக உருவாகின்றது.

**37. தமிழர் பரம்பரை குறித்துக் கருத்துப்படம் வரைக.**




**38. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.**

- மழைவெள்ளப் பாதிப்பை தாங்கக் கூடியவையாகப் புதிய கட்டுமானங்களைக் கட்டுதல்.
- நீர்வழிப் பாதைகளுக்கான தெளிவான வரைபடம் உருவாக்கிப் பராமரித்தல் வேண்டும்.
- சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டங்களை சமூக இயக்கமாக வளர்த்தெடுத்தல் வேண்டும்.
- கடற்கரை ஓரங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்த்தல் வேண்டும்.
- குளம், குட்டைகளைத் தூர்வாரி பராமரிக்க வேண்டும்.
- வானிலை ஆராய்ச்சி மையம் வெளியிடும் புயல், மழை தொடர்பான தகவல்களை முன்கூட்டியே மக்களைச் சென்றடைய செய்ய வேண்டும்.

**(பிரிவு -3) (3X4=12)**

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.**

**39. பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு பொருத்தி எழுதுக.**

**அ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.**

**பழமொழியின் விளக்கம்**

❖ பிறருடைய செயல்களைக் குறைக்கூறிக் கொண்டே இருந்தால் நம்மோடு யாரும் இருக்கமாட்டார்கள்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**பன்னிரெண்டாம் வகுப்பு - தமிழ் - அரையாண்டுத்தேர்வு 2023, சென்னை (மாவட்டம்)**

(Dr. S. ABDUL HAKKEEM, M.A., B.Ed., Ph.D., P.G. Asst in Tamil, GHSS, Velachery, Chennai - 600042)

**வாழ்க்கை நிகழ்வு**

❖ என் அக்கா பிறரோடு பழகும் போது, தன் உறவினர்களிடம் இருக்கக்கூடிய கெட்டப் பண்புகளை மட்டும் சுட்டிக்காட்டிக் கொண்டே இருப்பார். கேட்டால் எனக்கு மறைத்துப் பேசத் தெரியாது. எல்லாவற்றையும் நேர்ப்பட பேசிதான் எனக்கு பழக்கம் என்பார். திடீரென்று அவர் வீட்டில் தனியாக இருக்கும்போது வழுக்கி விழுந்துவிட்டார். அப்போது அவருக்கு உதவயாரும் முன் வரவில்லை. ஏனென்றால் எப்படியிருந்தாலும் இப்படி அழைத்துப் போயிருக்கலாம், இந்த மருத்துவமனைக்குப் போயிருக்கலாம் என்று குறை பேசுவார்.

**பழமொழியோடு தொடர்புபடுத்துதல்**

❖ "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்பது போல என் அக்காவிற்குப் பயந்து யாரும் அவருக்கு உதவ முன்வரவில்லை. அப்போதுதான் அவர் தன் தவறை உணர்ந்தார்.

**ஆ) "ஊழி பெயரினும் தாம்பெயரார்"**

**பழமொழி விளக்கம்**

❖ மேன்மை குணம் பொருந்தியவர்கள் எத்தகைய துன்பம் வந்த போதும் தம் உயர் குணத்திலிருந்தும் மாறுபடாதவர்கள் என்பதனை விளக்குகிறது இப்பழமொழி.

**வாழ்க்கை நிகழ்வு**

❖ வறுமையான குடும்பத்தில் பிறந்த நன்கு படிக்கக்கூடிய ஒரு மாணவன் தனியார் பள்ளியில் படித்து வந்தான். ஆனால் பள்ளி கட்டணத்தை சரிவர கட்ட முடியவில்லை. ஆசிரியர் மீண்டும் மீண்டும் பள்ளி கட்டணத்தை அவனிடம் கேட்பார். அவன் ஏதாவது காரணத்தைக் கூறி நாட்களை கடத்தினான். ஒருநாள் பள்ளியை விட்டு வீட்டுக்குச் செல்லும்போது ஒரு பணப்பையைக் கண்டெடுத்தான். அதில் நிறைய பணம் இருந்தது. அதை எடுத்துக்கொண்டு போய் பள்ளிக் கட்டணம் செலுத்தி இருக்கலாம். ஆனால் அவன் அவ்வாறு செய்யவில்லை. அருகிலிருந்த காவல் நிலையத்திற்குச் சென்று பணப்பை ஒப்படைத்தான். அவனைக் காவல் நிலைய அதிகாரிகள் பாராட்டினார்கள்.

**பழமொழியோடு தொடர்புபடுத்துதல்**

❖ வறுமை தம்மை வாட்டினாலும் தன் பண்புகளில் இருந்து சற்றும் விலகக்கூடாது என்பது "ஊழி பெயரினும் தாம்பெயரார்" என்ற இப்பழமொழியின் நீதி ஆகும்.

**40. குறிப்புகளின் மறைந்திருக்கும் தமிழறிஞர்களைக் கண்டுபிடிப்போம்.**

1. தமிழறிஞர் : முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம். - **மறைமலை அடிகள்**
2. தாய்மொழி : ஈற்றிரு எழுத்துகள் வெளிச்சம் தரும். - **தமிழ் ஒளி**
3. சிறுகதை ஆசிரியர் : முதல் பாதி நவீனம் - **புதுமைப்பித்தன்**
4. முன்னெழுத்து அரசன் பின்னெழுத்து தமிழ் மாதம். - **கோதை**

(தமிழ் ஒளி, அம்பை, கோதை, அசோகமித்திரன், புதுமைப்பித்தன், சூடாமணி, ஜெயகாந்தன், மறைமலை அடிகள்)

**41. செவியறிவுறூஉ துறையை விளக்குக.**

**செவியறிவுறூஉ துறை**

➢ அரசன் தவறுதலாகச் செயல்பட நேரும்போது செய்ய வேண்டிய கடமைகளை முறைதவறாமல் செய்யும் வகையில், அரசனுக்கு அறிவுரையாகக் கூறுவது -செவியறிவுறூஉத் துறையாகும்.

**சான்று**

**"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;**
**மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;"** - என்ற புறநானூற்றுப் பாடல்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**பன்னிரெண்டாம் வகுப்பு - தமிழ் - அரையாண்டுத்தேர்வு 2023, சென்னை (மாவட்டம்)**

(Dr. S. ABDUL HAKKEEM, M.A., B.Ed., Ph.D., P.G. Asst in Tamil, GHSS, Velachery, Chennai - 600042)

**துறைப் பொருத்தம்:**

- அறிவுடை வேந்தன், மக்களிடம் வரி திரட்டும் நெறிமுறை அறிந்து வரியைத் திரட்டினால், நாடு பெருஞ்செல்வத்தைப் பெற்றுச் செழிப்படைவதோடு அவன் எண்ணமும் நிறைவேறும் எனப்பிசிராந்தையார் கூறுவதன் மூலம் இது செவியறிவுறூஉ துறை என்பது புலப்படுகிறது.

**41. (அல்லது) வாகைத்திணையை விளக்குக.**

**திணை விளக்கம்**

- போரில் வெற்றி பெற்ற அரசனின் வெற்றியைச் சிறப்பிப்பது வாகைத் திணையாகும். வெற்றி பெற்ற அரசனும் அவனது வீரர்களும் வெற்றியின் அடையாளமாக வாகைப் பூவை சூடி மகிழ்வது வாகைத்திணையாகும்.

**சான்று**

**"வையகம் பனிப்ப வலனேர்பு வளைஇப்**
**பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தேன்"** - எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடல்

**திணைப் பொருத்தம்**

- இப்பாடல் பாண்டியன் நெடுஞ்செழியனின் வெற்றிச் சிறப்புக்கள் பாடப்படுவதால் இது வாகைத் திணையாகும்.

**42. இலக்கிய நயம் பாராட்டுக. (மையக்கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)**

**பூமிச்சருகாம் பாலையை**
**முத்துபூத்த கடல்களாக்குவேன்**
**புயலைக் கூறுபடுத்தியே - கோடிப்**
**புதிய தென்றாலாக்குவேன்**
**இரவில் விண்மீன் காசினை -செலுத்தி**
**இரவலரோடு பேசுவேன்!**
**இரவெரிக்கும் பரிதியை - ஏழை**
**விறகெரிக்க வீசுவேன்** **-நா. காமராசன்**

**திரண்ட கருத்து**

- காய்ந்து கிடக்கும் பாலைவனப்பூமியை முத்துகள் பிறக்கும் கடல்களாய் ஆக்குவேன். 6 புயலின் வேகத்தைக் குறைத்துப் புதிய தென்றலாய் ஆக்குவேன். பொருள் வேண்டுவோர்க்கு விண்மீன் காசுகளைக் கொடுத்து, அவர்களோடு பேசுவேன். இரவை அழிக்கும் சூரியனை ஏழையர்க்கு விறகெரிக்க வீசுவேன் என்கிறார். சுவிஞர்.

**மையக்கருத்து**

- சமுதாயத்தில் மலிந்துகிடக்கும் சீர்கேடுகளையும் வன்மங்களையும் தம் கவிதைகள் மூலம் குறைத்திடவும், ஏழைகளின் நிலையை உயர்த்திடவும் முடியும் என்னும் மையக்கருத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

**தொடைநயம்**

- இப்பாடலில் எதுகைத்தொடை, மோனைத்தொடை, இயைபுத்தொடை ஆகியவை அமைந்துள்ளன.

**எதுகைத்தொடை**

- அடிதோறும் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடி எதுகையாகும்.

இப்பாடலில், **இரவில் - இரவலரோடு, இரவில் - இரவெரிக்கும்** என எதுகை அமைந்துள்ளது.

**மோனைத்தொடை**

- அடிதோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது அடிமோனையாகும். சீர்களில் முதல் எழுத்து ஒன்றி வருவது சீர்மோனையாகும்.

இப்பாடலில், **புயலை – புதிய** எனச் சீர்மோனைகள் அமைந்துள்ளன.

**இரவில் - இரவலரோடு** என அடிமோனைகள் அமைந்துள்ளன.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**இயைபுத்தொடை**

- பாடலின் கடைசிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத்தொடை ஆகும். **கடல்களாக்குவேன் - தென்றலாக்குவேன், பேசுவேன் - வீசுவேன்** என இயைபுத்தொடை அமைந்துள்ளது.

**43.அ) அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க. இகல்வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.**

- இக்குறட்பாவில் தொழில் உவமை அணி பயின்று வந்துள்ளது.

**அணி விளக்கம்**

- ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்குப் பண்பு, தொழில், பயன் ஆகியவற்றில் உள்ள ஒப்புமை தோன்றக் கூறுவது தொழில் உவமை அணியாகும்.

**அணிப்பொருத்தம்**

- அகலாது அணுகாது தீய்க்காய்வதைப் போல, அரசனை விட்டு விலகாமலும், நெருங்காமலும் இருக்க வேண்டும் என்பது இக்குறளின் பொருளாகும்.இங்கு உவமையாய்ப் பயன்படுத்தப்படும் 'தீக்காய்தல்' ஒரு தொழில் அல்லது செயல் ஆகும்.

**43. (ஆ) சொற்பொருள் பின்வரும் நிலையணியைச் சான்றுடன் விளக்குக**

**அணி இலக்கணம்**

- செய்யுளில் ஒரு சொல், மீண்டும் மீண்டும் வந்து, ஒரே பொருளைத் தருமாயின் அது சொற்பொருள் பின்வரும் நிலையணி எனப்படும்.

**சான்று**

**"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு."**

**அணிப்பொருத்தம்**

- இக்குறட்பாவில், பொருள் என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து, 'செய்தி' என்னும் ஒரே பொருளைத் தருவதால் இது சொற்பொருள் பின்வரும் நிலையணி ஆயிற்று.

## பகுதி – IV (3x6=18)

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.**

**44. அ) தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.**

**பொன்னிறப் பூக்காடு**

- மேற்கில், மாலையில் மறையும் கதிரவன் செந்நிற ஒளியால் வானத்தைச் செந்நிறமாக்கியது. அது செந்நிறப் பூக்கள் பூத்த பூக்காடு போல் விளங்குகிறது.

**வருந்தி உழைக்கும் உழைப்பாளி**

- வருந்தி உழைப்பதால் தொழிலாளர்களின் கரங்களில் சிவப்பேறியுள்ளது தோள்களில் முத்துமுத்தாய் வியர்வை தோன்றுகின்றது.

**கவி பாட நீயே துணை**

- அந்திவானத்தின் செந்நிறக்காட்சி, உழைப்பாளர்களின் உழைப்பு ஆகியவற்றைப் பாடக் கிடைத்த செந்தமிழே எனக்குத் துணை.

**சங்கத்தில் வீற்றிருந்த தமிழரசி**

- உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் தமிழ், பல நூல்கள் உருவாகக் காரணமாய் இருந்தது. சிறப்புமிக்க தமிழ், பாண்டியர் அமைத்த முச்சங்கங்களில் அரசியாய் கொலுவிருந்தது.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**அந்த நாளும் வந்திடாதோ**

- மொழியைப் போற்றி வளர்த்த புலவர்களும், அவர்களுக்கு ஆதரவளித்த பாரி போன்ற வள்ளல்களும் வாழ்ந்தனர். அத்தகைய சிறப்புகள் மீண்டும் வரத் தமிழ்க்குயிலே கூவிடு.

**சிங்கமே, தடைகளைத் தகர்த்திடு**

- சிங்கம் தன்னை அடைத்து வைத்திருக்கும் கூண்டினை உடைத்து வெளியேறும். அதுபோல், பொதிகை மலையில் தோன்றிய தமிழே, உன் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவற்றைத் தகர்த்திடு.

**44. (ஆ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணைநிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக.**

- திருக்குறளில் அறிவுடைமை அதிகாரத்தில் உள்ள கருத்துகள் வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி காண்போம்.
- அறிவு ஆபத்திலிருந்து நம்மைக் காத்திடும் கருவியாக விளங்குகிறது.
- பகைவராலும் அழிக்க முடியாத பாதுகாப்பு நிறைந்த அரணாகவும் அறிவு திகழ்கிறது.
- மனத்தை அது போகும் வழியில் செல்லவிடாமல், தீமையில் இருந்து தடுத்து நல்ல வழியில் அறிவு செலுத்துகிறது.
- எந்த ஒரு பொருளைப் பற்றி யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் உண்மைத் தன்மையைக் காண்பது அறிவாகும்.
- எத்தகைய உயர்ந்த நெறியில் உலகம் செல்கிறதோ தானும் அந்நெறியில் உலகத்தோடு இணைந்து செல்வதே அறிவாகும்.
- பின்னர் வரப்போவதை முன்கூட்டியே அறிந்து தன்னைக் காத்துக் கொள்ளும் அறிவுடையோர்க்கு நடுங்கும்படியான துன்பம் ஒன்றும் வருவதில்லை.
- இவ்வாறு, அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என வள்ளுவம் வழிகாட்டுகிறது.

**45. அ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் ஒரு கட்டுரை எழுதுக.**

**முன்னுரை**

- தமிழ் இலக்கியக் கருவூலங்களான சங்க இலக்கியங்களைத் தந்த மண், மதுரை, இன்றைய மதுரை தூங்கா நகரம் என்று வழங்கப்படுகிறது. மணக்கும் மல்லிகை, சுடச்சுடச் சுக்குக்காபி, பூவாய் இட்டலி, ஜில்ஜில் ஜிகர்தண்டா, காணும் இடமெல்லாம் கண்கவர் கோபுரங்கள் எனப் பல பெருமைகளை உடையது. புதுரை. இது பழமை வாய்ந்த நகரங்களுள் ஒன்று. மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் உலகப் புகழ்பெற்ற

**பல பெயர்கள் கொண்ட மதுரை**

- 2500 ஆண்டுகளுக்குமுன் கடம்ப மரங்கள் நிறைந்த பகுதியாய் இருந்தது, மதுரை, எனவே, கடம்ப வனம் என்று வழங்கப்பட்டது. மருத மரங்கள் அதிகம் இருந்ததால் மருதை என்று வழங்கப்பட்டதாகவும், அதுவே பின் மதுரை என்று மருவியதாகவும் கூறுவர், புலவர்கள் கூடி இலக்கிய விவாதம் செய்ததால் கூடல் நகர் என்று வழங்கப்பட்டது. நான்கு நதிகள் கூடுமிடம் என்பதால் நான்மாடக்கூடல் என்று வழங்கப்பட்டது. நிலைகளுக்கு நடுவில் இருப்பதால் ஆலவாய் என்றும் வழங்கப்பட்டது. மதுராபுரி என்ற பெயரும் பெற்றுள்ளது.

**பழைமையான நகரம்**

- உலக நாகரிகங்களுள் பழைமையானது தமிழர் நாகரிகம், தமிழகத்தில் வைகை நதி நாகரிகமும் மிகவும் பழைமை வாய்ந்தது. மதுரை மாநகரம் பாண்டிய மன்னர்களால் கி.பி. 16ஆம் நூற்றாண்டு வரை ஆட்சி செய்யப்பட்டது. தொடர்ந்து நாயக்கர்கள் ஆண்டனர். அதன் அடையாளமே மீனாட்சி அம்மன் கோவில் அருகிலுள்ள திருமலை நாயக்கர் மகால் ஆகும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**மதுரை நகரின் அமைப்பு**

- மதுரை மாநகரின் அமைப்பு சிந்துசமவெளி நாகரிகத்தைப் போன்று அமைந்துள்ளது. மதுரையைப் பலர் ஆண்டனர் பாண்டியர், நாயக்கர் ஆகியோர் காலமே மதுரையின் பொற்காலம் ஆகும். சுல்தான்கள், ஆங்கிலேயர்கள், நாயக்கர் காலங்களில் பல சாதனைகளையும் சோதனைகளையும் மதுரை கண்டுள்ளது.
- மதுரை மீனாட்சி அம்மன் கோவிலை மையமாய் வைத்து அமைக்கப்பட்ட மாட, ஆவணி, மாசி வீதிகள் மதுரையின் வரலாற்றுச் சான்றுகள். வடிவமைப்பில் சிறப்புப் பெற்ற இந்திய நகரங்களில் மதுரை நகரும் ஒன்று. இங்கு ஆண்டு முழுவதும் திருவிழா நடைபெறும், மதுரையில் தெருக்களின் பெயர்கள் சித்திரை, மாசி, ஆவணி என்று மாதங்களின் பெயரால் அமைந்துள்ளன. நீர்நிலைகளைப் பெருமைப்படுத்தும் விதமாய்த் தங்கள் ஊருக்கு மாடக்குளம், ஆத்திகுளம், கரிசல் குளம் போன்ற பெயர்களை வைத்தனர்.

**மதுரையின் சிறப்பு**

- மதுரையின் அடையாளம், மீனாட்சி அம்மன் கோவில், கிறிஸ்து பிறப்பதற்கு முன் இது கட்டப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. இக்கோவில் பாண்டியர்களால் கட்டப்பட்டது. பின், இஸ்லாமியப் யெடுப்பினால் இக்கோவில் அழிக்கப்பட்டது. பின், 15ஆம் நூற்றாண்டில் நாயக்கர்களால் இக்கோவில் புதுப்பிக்கப்பட்டது. சித்திரைத் திருவிழா 30 நாள்கள் சிறப்பாய் நடைபெறும். ஆயிரம் கால் மண்டபம், நாயக்கர் மகால், அருங்காட்சியகம், காந்தி அருங்காட்சியகம் போன்ற சிறப்புமிக்க இடங்கள் மதுரையில் உள்ளன. மதுரை மாநகருக்கு அருகில் கிளிமூக்கு அருவி, கிளிநொச்சி அருவி, காட்டுப்பாறை அருவி, ஒத்தப்பாறை அருவி போன்றவை அமைந்துள்ளன.

**முடிவுரை**

- மதுரையில் 24 மணிநேரமும் மலிவு விலையில் உணவு கிடைக்கும். தமிழையும் மதுரையையும் பிரிக்க இயலாதபடி அவை ஒன்றிணைந்துள்ளன. சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்றைய இலக்கியங்கள்வரை மதுரையின் பெருமையைப் பேசுகின்றன.

**45. (ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**நிருவாக மேலாண்மை**

- பணியாளர்களை நிருவகிக்கும் மேலாண்மையே நிருவாக மேலாண்மை ஆகும். ஒரு செயலைத் திட்டமிடுதலும் செயல்படுத்துதலும் இதன் கூறுகளாகும்.
- உயர்பதவிகளில் இருப்பவர்கள், எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருக்க மாட்டார்கள்.
- பணியாளர்களில் யார் திறமைசாலிகள் என்று தெரிந்திருப்பது, ஒருவகை அறிவு. யாருக்கு என்ன தெரியும் என்று தெரிந்திருப்பது, மற்றொருவகை அறிவு.

**நாலடியார் கூறும் மேலாண்மை**

- படிக்காதவர் என்றாலும், கற்றாரோடு சேர்ந்திருக்கும்போது, நல்லறிவை நாளும் பெற்றுச் சிறப்படைவர்.

**நிருவாகத்தில் வரவும் செலவும்**

- வரவுக்குமேல் செலவு செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவலநிலைக்குத் தள்ளப்படுவான்.

**ஷேக்ஸ்பியர் நாடக நிதி மேலாண்மை**

- டைமன் என்பவன் ஒரு ஊதாரி. ஏதென்ஸ் நகரில் வாழ்ந்து வந்தான். இறுதியில் எல்லாவற்றையும் இழந்துவிடும் ஊருக்கு வெளியே சென்று வாழ்கிறான்: மனித இனத்தையே வெறுக்கிறான்.

**ஔவையாரின் நிதி நிருவாக மேலாண்மை**

- வரவுக்கு மேலே செலவு செய்பவன் மானம் இழந்து, புத்திகெட்டுப் போவான் அவன் செல்லும் இடமெல்லாம் திருடனாய்த் தூற்றப்படுவான்: ஏழு பிறவிகளிலும் கெட்டவனாய் மாறுவான். நல்லவர்களுக்கு எல்லாம் அவன் பொல்லாதவன் ஆவான்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

**மேலாண்மையில் மாற்றம்**

- மேலாண்மை என்பது வெறும் புத்தக அறிவுடன் முடிந்துவிடுவதன்று. நொடிக்கு நொடி சூழல்கள். மாறிக்கொண்டேயிருக்கின்றன. இப்போதெல்லாம் பல நிறுவனங்களில் 'முன் அனுபவம்' என்பது எதிர்மறையாகிவிட்டது. அனுபவசாலிகள் செக்குமாடாய் இருப்பார்கள் என்று எண்ணி, ஜல்லிக்கட்டுக் காளைகளான இளைஞர்களையே தேர்வு செய்கிறார்கள்.
- வீடோ நாடோ முன்னேற நிருவாகத்திறன் இன்றியமையாத ஒன்றாகும். எத்தகைய இடர் வந்தாலும் எதிர்கொள்ளச் செய்வது நிருவாக அறிவேயாகும்.

**46. (அ) "சாலை விபத்தில்லா தமிழ்நாடு" இக்கூற்று நனவாக நாம் செய்ய வேண்டியன யாவை?**

**முன்னுரை**

- இந்தியாவில் ஏற்படும் சாலை விபத்துகளில் 15 விழுக்காடு விபத்துகள், தமிழ்நாட்டில்தான் நடக்கிறது, இதற்கெல்லாம் காரணம் எதிர்விளைவினை அறியாமல் செய்யப்படும் மனிதத் தவறுகளே! எனவே, ஒவ்வொருவரும் தங்களின் தவறுகளைக் களைந்து, சாலைப் பாதுகாப்பினை மேம்படுத்துவோமாக!

**முறைப்படியான ஊர்தி இயக்கம்**

- 18 வயது நிறைந்த பின்னரே, ஊர்திகளை இயக்க முனைதல்.
- ஈருருளியில் தலைக்கவசம் அணிந்து செல்லுதல்.
- இருவர் மட்டுமே பயணித்தல்.
- கைப்பேசி, காதணி கேட்பி போன்ற கருவிகளைப் பயன்படுத்தாதிருத்தல்.
- சாலையில் சரியான பாதையில் ஓட்டுதல்.

**ஓட்டுநரின் பொறுப்புகள்**

- கவனக்குறைவாக ஓட்டுதல், மிகுந்த சுமைகளை ஏற்றுதல், போதிய பயிற்சியின்மை.
- இருப்புப் பாதைகளைக் கவனியாதிருத்தல்.
- தட்பவெப்பநிலை அறியாமை, குடிபோதையில் ஓட்டுதல்.

**மாணவர்களுக்கான சாலை விழிப்புணர்வு**

- கவனமின்றிச் சாலையைக் கடத்தல் நடுவே செல்லுதல்.
- சாலையை அடைத்துக்கொண்டு செல்லுதல்.
- பேருந்தின் படிக்கட்டில் பயணம் செய்தல்.
- சாலையில் ஊர்தியைக் குறுக்கும் நெடுக்குமாக இயக்குதல்.

**சாலை விதிகளைப் பின்பற்றுதல்**

- போக்குவரத்துக் குறியீடுகளை அறிந்து செயல்படுதல்,
- சாலையின் வகைகள், மைல் கற்களின் விவரங்களைத் தெரிதல்.
- போக்குவரத்துக் காவலர்களின் உத்தரவுகளைப் பின்பற்றுதல். விரைந்து செல்லும் ஊர்திகளுக்கு வழிவிடுதல்.

**முடிவுரை**

- சாலை விதிகளை அனைவரும் அறிந்து பின்பற்றுதல் வேண்டும்.இப்படியாய் ஒவ்வொருவரும் தனிமனிதக் கவனத்துடனும், பொதுநல அக்கறையுடனும் பயணித்தால், சாலை விபத்தில்லாத தமிழ்நாடு உறுதியாய் உருவாகிடும் என்பதில் ஐயமில்லை.

**46. (ஆ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.**

**முன்னுரை**

- பெண் படைப்பாளர் சாந்தாதத் எழுதிய "கோடைமழை" என்னும் சிறுகதையில் வெளிப்படும் அடிப்படைப் பண்பாய் மனிதநேயம் விளங்குகிறது. இக்கதையில் வரும் கதைமாந்தர் வாயிலாக மனிதநேயப் பண்புகளை பின்னிப் பிணைத்துக் காட்டியுள்ளார் படைப்பாளர் சாந்தாதத்.

**பன்னிரெண்டாம் வகுப்பு - தமிழ் - அரையாண்டுத்தேர்வு 2023, சென்னை (மாவட்டம்)**

(Dr. S. ABDUL HAKKEEM, M.A., B.Ed., Ph.D., P.G. Asst in Tamil, GHSS, Velachery, Chennai - 600042)

**ஆறுமுகத்தின் துயரம்**

- கைக்குழந்தையை விட்டுவிட்டு, நான்கு நாள் காய்ச்சலில் கட்டியவள் கண் மூடியபின், வாழப் பிடிக்கவில்லையென்று ஆறுமுகத்தின் மகனும் விஷத்தை விழுங்கிப் போய்ச் சேர்ந்துவிட்டான். "உனக்கு நான், எனக்கு நீ" என்றாகிவிட்ட நாதியற்ற அவஸ்தையுடன் ஆறுமாதம் அந்தப் பச்சை மண்ணுடன் அவஸ்தைப்பட்டார் ஆறுமுகம்.

**பாசப்பிணைப்பு**

- நாற்பது ஆண்டுகளுக்கு மேலாய் நிழலாக இருந்த ஆறுமுகத்தின் மனைவி, பூமியில் தன் கணக்கை முடித்துக்கொண்டபின் மனைவியின் சிதையில் அவர் விழவில்லை மகனுக்காக வாழ்ந்தார். ஒற்றை ஆளாய் வளர்த்து ஆளாக்கி, வேலையில் அமர்த்தி, அவனுக்கு ஒரு குடும்பத்தையும் உருவாக்கிக் கொடுத்தார். ஆனால், அவனும் அவன் மனைவியும் கைக்குழந்தையோடு ஆறுமுகத்தைத் தவிக்கவிட்டுப் போய்விட்டனர்.

**பாபுவின் கருணை**

- குழந்தையின் காய்ச்சலுக்கு மருத்துவமனை சென்று மருந்துச் சீட்டோடு வந்த ஆறுமுகம் நீண்ட நாள்களாய் அந்த மருந்துக்கடை பாபு சொன்னதை யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தார். தள்ளாத வயதில் இருக்கும் தன் காலத்திற்குப் பிறகு குழந்தையின் நிலைமை என்னவாகும் என யோசித்துத்தான் குழந்தையைத் தத்துக் கொடுக்க முடிவு செய்தார், ஆறுமுகம்.

**மனம்மாறிய ஆறுமுகம்**

- "அம்மா என்கிற பாசமே தெரியாமல் இருக்க இதுமட்டும் என்ன பாவம் செய்தது? தாயின் பரிவும் பாசமும் ஒரு குழந்தைக்கு எவ்வளவு முக்கியம்னு இப்பதான் நல்லாப் புரிஞ்சது, பாபு. இதைப் பிரிஞ்சிருக்க முடியாதே என்கிற என்னோட சுயநலத்துக்காக இதை அநாதையா விட்டுவிட்டுப் போறது எவ்வளவு பெரிய பாதகம்!" என்று மனிதநேயத்துடன் மனம் திறந்தார், ஆறுமுகம்.

**தத்து எடுத்த தம்பதி**

- மறுநாள் பாபுவுடன் வந்த தம்பதி, முறைப்படி குழந்தையைத் தத்து எடுத்தனர். குழந்தையைப் பெற்றுக்கொண்ட கணவனின் முகத்தில் ஏக்கம், தலிப்பு, எதிர்பார்ப்பு ஆகிய அத்தனையும் தெரிந்ததைப் பார்த்த ஆறுமுகம், விழிநீரைப் பிடிவாதமாய், வந்த வழி அனுப்பி வைத்தார். அப்போது, குழந்தையைத் தத்து எடுத்த கணவன், "ஐயா! ரொம்பப் பெரிய மனசோட எங்க வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கொடுத்திருக்கீங்க. நீங்களும் எங்களோ, வந்துடுங்கய்யா!" என்றான்.

**முடிவுரை**

- குழந்தையைப் பிரிந்த அந்த முதியவர் அநாதையாகிவிடக்கூடாது என்பதற்காகக் குழந்தையோடு சேர்த்து அவரையும் தத்தெடுக்கும் மனிதநேயப் பண்பினைத் தத்துஎடுத்த தம்பதி பாத்திரப் படைப்பில் வெளிப்படுத்துகிறார், ஆசிரியர்.

**பகுதி - V** **(4+2=6)**

47. அ) **"காய்நெல்….."** எனத் தொடங்கும் மனப்பாடப் பாடல்

**"காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே;**
**மாநிறைவு இல்லதும், பல்நாட்கு ஆகும்;**
**நூறுசெறு ஆயினும், தமித்துப்புக்கு உணினே,**
**வாய்புகுவதனினும் கால்பெரிது கெடுக்கும்;** - பிசிராந்தையார்.

ஆ) ….**அரிது'** என முடியும் திருக்குறள்

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்ற லரிது."** - திருவள்ளுவர்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com